## 10. நீங்கள் பாதிப்படைந்திருந்தால் என்ன செய்ய வேண்டும் ?

i. முகக் கவசம் அல்லது கைக்குட்டை கொண்டு வாயையும் மூக்கையும் மூடிக்கொள்ள வேண்டும்.

ii. உடனடி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அதிகாரிகளிடம் தெரிவிக்கவும் அல்லது இதற்கென உள்ள மருத்துவமனைகளின் சிறப்பு முகப்பு பிரிவுகளுக்குச் செல்லவும்.

iii. பொது வாகனங்களை பயன் படுத்த வேண்டாம்.
பொது மக்கள் உடனான தொடர்பை குறைத்துக் கொள்ளவும்.

## 11. இந்த நோய் மரணத்தை விளைவிக்குமா?

குழந்தைகள்,வயதானர்வர்கள் மற்றும் நுரையீரல்,இருதய பிரச்னையால் நீண்ட நாள் அவதிப் படுவோருக்கு பல சிக்கல்களை இது ஏற்படுத்தும் என்பதால் மரணம் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

Utamakan Kesihatan

Sihat Sepanjang Hayat
Sihat Sepanjang Hayat

Diterbitkan oleh:
KEMENTERIAN KESIHATAN MALAYSIA
Tel: 03-8881 0200/300
Laman Web: http://dph.gov.my/survelans/
http://www.infosihat.gov.my
PI.6 (versi 1), 12/2006 (BT 30,000)

# பென்டெமிக் இன்புளுவென்சா

நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டியது




# அடிக்கடி வினவப்படும் கேள்விகள் (அ வி கே)

## 1. பென்டெமிக் இன்புளுவென்சா என்பது என்ன ?

பென்டெமிக் என்பது உலகம் முழுவதும் பரவும் ஒரு நோய். ஒரு புதிய வகை இன்புளுவென்சா A வைரஸ் உருவெடுத்து அதை எதிர்ப்பதற்கான சக்தி மக்களுக்கு இல்லை என்றால் அல்லது குறைவாக இருந்தால் கடுமையான நோயாக அது உருவெடுத்து ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு எளிதாக உலகம் முழுவதும் பரவும்.

## 2. இன்புளுவென்சாவின் அறிகுறி என்ன?

- கடுமையான காய்ச்சல் ( 38°C க்கு மேல்)
- தொண்டைப் புண்
- தலை வலி
- சோர்வு
- தசை/மூட்டு வலி
- ஆரம்ப கட்டத்தில் சளி இல்லாத வறட்டு இருமல்

நோயாளிகளுக்கு இதுவும் ஏற்படும்

- விழிப்படல அழற்சி
- வயிற்றோட்டம்
- மூச்சுத் திணறல்

## 3. மக்களுக்கு எப்படி தொற்றுகிறது ?

பாதிக்கப்பட்ட ஒருவர் மற்றவருடன் நெருக்கமாக பழகும் போது (3 அடி அல்லது 1மீட்டருக்கு குறைவாக) அவரது வாய், மூக்கு வழி வெளியாகும் நீர் சாரல்/நீர் துளிகள் மூலம் பரவும்.
தூய்மைக்கேடான இடங்கள் அல்லது பொருள்கள் மூலமும் பரவும்

## 4. நாம் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?

- பாதிக்கப்பட்டவருடன் தொடர்பு இருந்தால்/நெருக்கமாக பழகினால் முகக் கவசம் அந்து கொள்ளவும்.
- சுத்தத்தை கடைபிடிப்பதோடு ஆரோக்கியமான வாழ்க்கை வாழவும்.
- இன்புளுவென்சாவுக்கான அடையாளமும்,அறிகுறியும் தெரிந்தால் உடனடியாக மருத்துவரின் ஆலோசனையைப் பெறவு.ம்.

## 5. இன்புளுவென்சாவுக்கெதிராக சிறப்பு சிகிச்சை உள்ளதா?

இல்லை.நோய்க் கிருமியின் தாக்கத்தை வைத்தே சிகிச்சை அளிக்கப் படுகின்றது.தாமதமான சிகிச்சை, பயன் தராமல் மரணத்தை ஏற்படுத்தும்.

## 6. பென்டெமிக் இன்புளுவென்சாவுக்கெதிரான தடுப்பூசி உள்ளதா?

இல்லை. நடப்பில் உள்ள தடுப்பூசி, பென்டெமிக் இன்புளுவென்சாவுக்கெதிரான சிறப்பு பாதுகாப்பு எதனையும் வழங்காது.

## 7. பென்டெமிக் இன்புளுவென்சா ஏற்பட்டுள்ள போது வெளி நாட்டுக்கு பயணம் மேற்கொள்வது பாதுகாப்பானதா?

முடிந்தவரை தவிர்க்கவும்.அவசியம் ஏற்பட்டால் பயணத்திற்கு முன்னர் சுகாதார அமைச்சின் ஆலோசனையை பெறவும்.

## 8. இன்புளுவென்சா,ஏவியன் இன்புளுவென்சா மற்றும் பென்டெமிக் இன்புளுவென்சா- இவற்றுக்கிடையிலான வேறுபாடு என்ன?

இன்புளுவென்சா என்பது இன்புளுவென்சா வைரஸ் கிருமி A,B அல்லது C யினால் தொற்றும் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய். பாதிக்கப்பட்ட ஒருவரின் தும்மல்/இருமல் மூலம் வெளியாகும் நீர் துளிகள்/சாரல் மூலம் மற்றவருக்கு பரவும். உலகம் முழுவதும் ஏற்படும் இந்த நோய் குறிப்பாக, குளிர் நாடுகளிலும் மிதமான தட்ப வெப்ப நிலை கொண்ட நாடுகளிலும் அடிக்கடி ஏற்படுவதோடு கடுமையானதாகவும் இருக்கும்.
இதை சீசனல் புளு என்று கூறுவர்.

ஏவியன் இன்புளுவென்சா அல்லது பறவைக் காய்ச்சல் என்பது பறவைகளுக்கும் கோழிகளுக்கும் வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் காய்ச்சல். மிகவும் அபாயகரமான இந்த நுண்ணுயிர் கிருமி சில வேளைகளில் மனிதர்களுக்கும் தொற்றி கடுமையான தாக்கத்தை கொண்டு வருவதோடு மரணத்தையும் விளைவிக்கும்.

ஏவியன் இன்புளுவெண்சா வைரஸ் கிருமி ஒருவித மரபியல் மாற்றத்துக்கு உள்ளாகி புதிய வகை வைரசை உருவாக்கும்.இந்த புதிய வகை வைரஸ், மிக எளிதாக ஒருவர் மற்றவருக்கு மிக எளிதாக தொற்றி உலகம் முழுவதும் பரவி பென்டெமிக் இன்புளுவென்சாவை ஏற்படுத்தும்.

## 9. இதற்கான சிகிச்சையை எங்கே பெறலாம்?

கீழ் கூறப்படும் அடையாளங்களும் அறிகுறியும் தென்பட்டால்
இதற்கென உள்ள மருத்துவமனைகளின் சிறப்பு முகப்பு பிரிவுகளுக்குச் செல்லவும்

- கடுமையான காய்ச்சல்.
- தொண்டைப் புண்
- தலை வலி
- சோர்வு.
- தசை/மூட்டு வலி
- ஆரம்பத்தில் சளி இல்லாத வறட்டு இருமல்.

